# <u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>

## O.S. No. 53/2016

Deposition of **PW.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 10.02.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : முருகேசன் Father's Name : முத்து உடையார்

துவக்க நேரம்: 03.53 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. தாவா வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைப்படத்தில் காட்டப்பட்டுள்ள ச.எண்.47/6-ன் நீள அகலம் எவ்வளவு என்றால் 4 மீட்டர் அகலமும், 86 மீ நீளமும் கொண்டது. நீதிமன்ற ஆணையர்மூலம் தாவா சொத்து அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். ச.எண்.47/6-ல் உள்ள பாதை எனது வழக்குரையில் சொத்து விவரத்தில் காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை, நான் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டுதான் மேற்படி பாதை போடப்பட்டது.

2. நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைப்படத்தில் எனது வீட்டின் வடக்கு பகுதியில் உள்ள பாதை காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை, அந்த பாதை எனது சொந்த உபயோகத்திற்காக போடப்பட்டது. மேற்படி பாதைக்கு வடபுறத்தில் (வக்ப்) இஸ்லாமிய சமுதாயத்திற்கு சொந்தமான நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதைக்கு தெற்கில் வரதராஜ பெருமாள் கோவிலின் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இஸ்லாமிய நிலம், வரதராஜ பெருமாள் கோவில் நிலம் ஆகிய இரண்டையும் நான் தான் அனுபவித்து வந்தேன் என்றால் சரிதான். வரதராஜ பெருமாள் கோவில் நிலத்திற்கு

தென்பகுதியில் எனக்கு சொந்தமாக பாக்கு நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பாக்கு தோப்பில் உள்ள கிணற்றிலிருந்துதான் எனது வீட்டின் அருகே உள்ள ச.எண்.47/7-ல் உள்ள நிலத்திற்கு பைப் லைன் மூலம் தண்ணீர் கொண்டு செல்கிறேன் என்றால் சரிதான். ச.எண்.48/1-ல் உள்ள கிணற்றிலிருந்து ச.எண்.47/6-ல் உள்ள நிலம் வழியாக ச.எண்.47/7 நிலத்திற்கு தண்ணீர் கொண்டு செல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பைப்லைன் ச.எண்.49/1-ல் உள்ள நிலத்தின் வழியாக செல்லவில்லை என்றால் சரியல்ல, ச.எண்.49/1 -ன் வழியாகதான் செல்கிறது.

3. ச.எண்.47/6-ல் உள்ள நிலத்திற்கு அருகில் தென்வடலாக ஒரு ராஜவாய்க்கால் செல்கிறது என்றால் சரிதான். மேற்படி ராஜவாய்க்கால் மற்றும் ச.எண்.47/6-ல் உள்ள பாதையை நான் எனது நிலத்துடன் சேர்த்துக்கொண்டேன் என்றாலும அதனால்தான் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு ச.எண்.47/6-ல் உள்ள பாதையை நடைப்பாதை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. மேற்கண்ட ராஜவாய்க்கால் வடக்கு நோக்கி சென்று மேற்காக செல்கிறது என்றால் மேற்கிலிருந்து வந்து தெற்கு நோக்கி செல்கிறது.

4. எனது வீட்டிற்கு வடபுறம் உள்ள தடமானது மேற்கு நோக்கி சென்று வடபுறம் உள்ள ரயில்வே பாதையுடன் இணைகிறது என்றால் ரயில்வே பாலத்தின் வழியாக செல்கிறது. நானும், பிரதிவாதிகளும் மேற்படி பாதை வழியாகதான் அவரவர் நிலங்களுக்கு போக வேண்டும் என்றாலும் அவ்வாறான பாதையில் எனது நிலத்தில் வழியாக செல்வதை ச.எண்.47/6-ல் உள்ள தடத்தை ஆக்கிரமிப்பு செய்து பிரதிவாதிகள் செல்வதை நான்தான் தடுத்து வருகிறேன் என்றாலும் ஆனால் பிரதிவாதிகள் எனது அனுபவத்திற்கு இடையூறு செய்வதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் ச.எண்.47/6-ல் உள்ள நிலத்தை தாவா சொத்தாக காட்டவில்லை

என்றாலும் பிரதிவாதிகளின் நிலமான ச.எண்.49/1-ல் உள்ள நிலத்தை மட்டும் தாவா சொத்தாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் தவறானது என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

முடிவு நேரம்: 04.32 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.53/2016, Dt.10.02.2026.